## சுருக்கம்

பள்ளிக் கல்வி – பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் நூலகங்களுக்கு ஆங்கில பருவ இதழ்கள் வாங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.72

நாள் 19.04.2017
திருவள்ளுவராண்டு, 2048
சித்திரை 6

படிக்கப்பட்டவை:-

பொது நூலக இயக்குநரின் ந.க.எண்.2664/எ1/2017–2, நாள் 12.04.2017.

*******

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பொது நூலக இயக்ககத்தின் கீழ் தற்போது மாநில மைய நூலகமான கன்னிமாரா பொது நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், 32 மாவட்ட மைய நூலகங்கள், 1926 கிளை நூலகங்கள், 1914 ஊர்ப்புற நூலகங்கள், 14 நடமாடும் நூலகங்கள் மற்றும் 715 பகுதி நேர நூலகங்கள் என மொத்தம் 4603 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், பொது நூலக இயக்ககத்தால் சுமார் 391 தமிழ் பருவ இதழ்களும் மற்றும் சுமார் 140 ஆங்கில பருவ இதழ்களும் நூல் தேர்வுக்குழு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டு, பொது நூலக இயக்ககத்தால் பராமரிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளது என்றும், அங்கீகரிக்கப்பட்டியலில் உள்ள நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் அந்தந்த மாவட்டங்களில் வாசகர்களால் அதிக அளவில் பயன்படுத்தும் இதழ்கள் தேவைக்கேற்ப அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழு நிதிநிலைமைக்கேற்ப வாங்கி வழங்கப்பட்டு வருகின்றன என்றும், “குறைந்த செலவில் சிறந்த நூலகச் சேவை” என்ற நோக்கத்தின் அடிப்படையில் பொது நூலகத்துறை சமூக வளர்ச்சியில் பங்கெடுப்பத்தோடு நூலக இயக்கமானது பொது மக்களின் அறிவார்ந்த தேவையை ஈடுசெய்வதற்கேற்ற நாளிதழ்கள், பருவ இதழ்கள் மற்றும் தரமான புதிய நூல்களை வாங்கி வழங்குவதன் மூலம் சிறந்த நூலகச் சேவை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது என்று பொது நூலக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், தமிழக மாணவ மாணவியர்கள் மற்றும் படித்த இளைஞர்களின் நலன் கருதி, கன்னிமாரா பொது நூலகம், மாவட்ட மைய நூலகங்கள், மாவட்டத் தலைநகர், நகராட்சி மற்றும் சிறிய நகரங்களில் அமைந்துள்ள மொத்தம் 273 நூலகங்களில் குடிமைப்பணி கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு தேசிய / மாநில அளவில் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளை எழுதும் இளைஞர்களின் நலனை முன்னிட்டு இம்மையங்களில் போட்டித் தேர்வுகளுக்கான நூல்கள் தினசரிகள், பருவ இதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், படித்த இளைஞர்கள் பயன் பெறும் வகையில் கோயம்புத்தூர், கரூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 6 மாவட்ட மைய நூலகங்களிலுள்ள குடிமைப்பணிப்பிரிவில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் அந்தவகையில், குடிமைப்பணித் தேர்வு மூலம் வேலை வாய்ப்பைத் தேடும் இளைஞர்களுக்குப் பயன் தரும் வகையில் அனைத்து மாவட்ட நூலகங்களில் செயல்படும் குடிமைப்பணி கல்வி மையங்களை நாடி வரும் கிராமப்புற இளைஞர்களும் போட்டித் தேர்வில் பங்கேற்கச் செய்யும் வகையில், அந்த இளைஞர்களுக்கும், சமமான வாய்ப்பளிக்கும் வகையில்

தரமான பருவ இதழ்களை 2017–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாவட்ட மைய நூலகத்திற்கு 61 பருவ இதழ்கள் என்ற கணக்கில் 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு ரூ.24,89,632/– செலவிலும், 241 முழுநேர நூலகங்களுக்கு ஒவ்வொரு நூலகத்திற்கும் 34 பருவ இதழ்கள் என்ற கணக்கில் ரூ.1,06,49,549/– செலவிலும், 320 கிளை நூலகத்திற்கு 19 பருவ இதழ்கள் என்ற கணக்கில் ரூ.68,96,000/– செலவிலும் ஆக மொத்தம் ரூ.2,00,35,181/– செலவில் மேற்கொள்ளலாம் எனவும், அதற்கான செலவினம் ரூபாய் 2,00,35,181–ஐ (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தைந்தாயிரத்து நூற்று எண்பத்து ஒன்று மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து வாங்கிக் கொள்வதற்கும், இதே போன்று ஒவ்வொரு ஆண்டும் பருவ இதழ்களை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியுதவி மூலம் வாங்குவதற்கு ஆணை வழங்குமாறு பொது நூலக இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும் பொது நூலக இயக்குநரின் கருத்து அரசால் பரிசீலிக்கப்பட்டு, அதன்படி 32 மாவட்ட மைய நூலகங்களுக்கு தலா 61 ஆங்கில பருவ இதழ்கள், 241 முழுநேர நூலகங்களுக்கு தலா 34 ஆங்கில பருவ இதழ்களும், 320 கிளை நூலகங்களுக்கு தலா 19 ஆங்கில பருவ இதழ்களையும், இணைப்பில் கண்டுள்ள தலைப்புகளின்கீழ் தரமான ஆங்கில பருவ இதழ்களை வாங்கிக் கொள்ள பொது நூலக இயக்குநருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இதற்கான ஆண்டொன்றுக்கு ஆகும் செலவினத் தொகையாக ரூ.2,00,35,181/–ஐ (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தைந்தாயிரத்து நூற்று எண்பத்து ஒன்று மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து வாங்கிக் கொள்வதற்கும், அதே போன்று ஒவ்வொரு ஆண்டும் இதற்கான செலவினத்தை தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும் ஒவ்வொரு ஆண்டும் மேற்படி நூலகங்களுக்கு வாங்கப்படுகின்ற ஆங்கில பருவ இதழ்கள் குறித்த அறிக்கையினை அரசுக்கு அனுப்புமாறு பொது நூலக இயக்குநர் கேட்டுக் கொள்ளப் படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை–2.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை–6.

<u>நகல்:–</u>
நிதி(கல்வி–II/வ.செ.பொ–I & II )சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்களின்
தனிச் செயலாளர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

**Annexure to G.O.(Ms) No.72, School Education (PL1) Department, Dated 19.04.2017**

I **FOR DISTRICL CENTRAL LIBRARIES:-**

i. Art and Culture
ii. Business
iii. Children
iv. Competition
v. Economics
vi. General
vii. Health
viii. Science and Technology
ix. Sports
x. Womens

II **FOR FULL TIME LIBRARIES:-**

i. Art and Culture
ii. Business
iii. Children
iv. Competition
v. Economics
vi. General
vii. Science and Technology
viii. Sports
ix. Womens

III **FOR BRANCH LIBRARIES:-**

i. Business
ii. Children
iii. Competition
iv. Economics
v. General
vi. Science and Technology

T. Udhayachandran,
Secretary to Government

/True Copy/

M. Sendhilkumar (signature)
Section Officer
19.04.17